அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education - NWP

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

43 | T | I

## முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ......................

கிறிஸ்தவம் I
Christianity I

காலம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 50 வரையான சகல வினாக்களுக்கும் I, II, III, IV, V என்கிற விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்க.**

01. பபிலோனியா அடிமைத்தனத்தின் பின்பு எழுதப்பட்ட நூல்கள் அரமேய மொழியில் எழுதப்படக் காரணம்
    1. யூதமக்களின் தாய்மொழி அரமயிக்
    2. அப்போதைய பேரரசர்கள் அரமயிக் மொழியை பாவிக்க கட்டளையிட்டமை
    3. பபிலோனிய அடிமைத்தன காலத்தில் யூத மக்கள் அரமயிக் மொழிக்கு பழக்கப்பட்டிருந்தமை
    4. அடிமைத்தனத்தின் முன்பிருந்தே அரமயிக் மொழியில் நூல்கள் எழுதப்பட்டிருந்தமை
    5. பழைய ஏற்பாட்டில் உள்ள நூல்கள் அனைத்தும் அரமயிக் மொழியில் எழுதப்பட்டிருந்தமை

02. கி.மு. 333 ஆம் ஆண்டில் பலஸ்தீனாவை ஆக்கிரமிப்பு செய்த கிரேக்க பேரரசன்
    1. நெபுகத்தேசர் 2. நீரோ 3. தொமீசியன் 4. மாமன்னர் அலக்சாண்டர் 5. திராஜன்

03. புனித ஜெரோம் திருவிவிலியத்தை இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்த்தது புனித பாப்பரசரின் வேண்டுகோளுக்கமைய அந்தப்பாப்பரசர்.
    1. டமாஸ்ஸஸ் பாப்பரசர் 2. முதலாம் சில்வெஸ்டர் 3. கொர்னேலியஸ் பாப்பரசர்
    4. முதலாம ஊர்வான் 5. சிக்ஸ்டஸ் பாப்பரசர்.

04. பழைய பலஸ்தீன எல்லை பகுதிகளுக்கேற்ப வடக்கும், தெற்கும் எல்லைகள்
    1. எபிரோன், தாண் 2. தாண், பெத்தேல் 3. சீலோ, செக்கேம்
    4. யூதேயா, இதுமேயா 5. தாண், பெயர்செபா

05. சமாரியர்கள் அவர்களுக்காக தேவமாளிகை அமைத்த இடம்
    1. கெரசீம் மலை 2. தபோர் மலை 3. கார்மேல் மலை 4. ஒலிவ் மலை 5. எருசலேம் மலை

06. “யோத்தாம்” என்ற இடத்தில் முக்கியத்துவமானது
    1. யோசியா மன்னனை கொலை செய்த இடம்
    2. யோசேப்பை இஸ்மேயலருக்கு விற்பனை செய்த இடம்
    3. தாவீது அரசரை திருப்பொழிவ செய்த இடம்
    4. திருமுழுக்கு யோவானின் பிறப்பு நடந்த இடம்
    5. எலியா இறைவாக்கியனரும், பாகால் தெய்வ குழுக்கள் பற்றிய சம்பவம் நடந்த இடம்

07. யோர்தான் ஆற்றுக்கு கிழக்கே உள்ள மலையிலிருந்து ஆரம்பிக்கும் கங்கைகள் மட்டும் அடங்கிய விடையானது
    1. யூப்ரடீஸ், டைக்றீஸ், யாபோக்கு, கீதோன் 2. பிசோன், கிகோன், சேரெத், டைக்றீஸ்
    3. யாபோக்கு, ஐபொக், அர்னோன், சேரெத் 4. கீதோன், கிஷோன், அர்னோன், யாபோக்கு
    5. யூப்ரடீஸ், கிகோன், திபேரிஸ், சேரெத்

08. கி.மு 1559 இல் கிஸ்சோவர்களை எகிப்திலிருந்து விரட்டிய எகிப்திய மன்னன் யார்?
    1. 1ம் இராம்சேஸ் மன்னன் 2. பெரிய ஏரோது மன்னன் 3. 1ம் அக்மோஸ் மன்னன்
    4. நெபுகத்நேசர் மன்னர் 5. சைரஸ் மன்னன்

09. “நீதித்தலைவர்கள்” வீரத்தலைவர்கள் மட்டும் அடங்கிய விடை யாது?
    1. சம்கத், ஏகூது, ஷேம், ஏலோன் 2. செத், இப்சான், ஜெப்தா, யாயீர்
    3. தெபோரா, சிம்சோன், ஷேம், சாலமோன் 4. அப்தோன், தோலா, சிம்சோன், கிதியோன்
    5. பாராக், ஹாம், ஒத்தனியேல், ஜபெத்

10. தாவீது அரசர் தனது தலைநகரமாக தெரிவு செய்து கொண்ட நகரமானது

1. செக்கேம் 2. எருசலேம் 3. பெத்தேல் 4. தாண் 5. பெயர் செபா

11. தாவீது, சாலமோன் அரசர்களுக்குப் பிறகு யூத நாட்டின் சிறப்பான மன்னனாவது
1. செதெக்கியா மன்னன் 2. யோயாக்கிம் மன்னன் 3. யோசியா மன்னன்
4. யோயாக்கின் மன்னன் 5. நாகாஷ் மன்னன்

12. மனிதர்களிடையே சிறந்த மனிதராக இறைவனை முன்வைக்கின்ற பாரம்பரியம்
1. யாலே பாரம்பரியம் 2. எலோகிம் பாரம்பரியம் 3. இணைச்சட்ட பாரம்பரியம்
4. குரு பாரம்பரியம் 5. வாய்மொழி பாரம்பரியம்

13. பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் என்றார்" இதன் மூலம் வெளிப்படுத்தும் விசேட ஆசீரைப்பற்றி கூறுவது.
1. இறைவனுடைய படைப்பு செயற்பாட்டின் இறுதிக் கட்டம்
2. படைப்பு மீது இறைவனுக்கு இருந்த அதிகாரத்தை மனிதனுக்கு ஒப்படைத்தமை
3. இறைவனின் ஆக்கபூர்வமானதை அவ்விடத்திலிருந்து மனிதனுக்கானவை என
4. எல்லா தீங்கிற்கும் முடிவு உண்டு என்பதை
5. மனிதனுக்கு படைப்பு மீது அனைத்து செல்களுக்கும் செய்ய முடியுமானது.

14. நன்மை தீமை அறியும் மரத்திலிருந்து உண்ணுவதன் மூலம் அறிவது என்ன?
1. ஒரு படைப்பான மனிதன் படைப்பாளியான இறைவனிடமிருந்து உரிமையை தன் மீது உரிமையாக்கிக் கொள்ளல்
2. தன்மீது இருக்கும் விசேடங்கள் பற்றி பெருமை கொள்ளல்
3. மனிதனுக்குரிய அதிகாரத்தை பிரசித்திப்படுத்தல்
4. மங்களகரமான வழிபாடுகள் செய்தமை
5. தனக்குள்ள தீர்மானம் எடுக்கும் சுதந்திரத்தை வெளிப்படுத்தியமை

15. தொ.நூ 3 : 15 இல் காணப்படும் முதல் விடுதலை நற்செய்தி என்ற ஆரம்ப நற்செய்தியின் கருத்தானது
1. இறைவன் பாவிகளுக்கு கருணை காட்டுவதை
2. மனித துக்கங்கள் அனைத்தும பாவத்தின் விளைவாக நினைத்தல்
3. மனிதருடைய வீழ்ச்சி காரணமாக இறைமனித தொடர்பை சீரழித்தமை
4. யேசுகிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் ஊடாக
5. யேசுகிறிஸ்து மனிதருக்கு அளித்த சுதந்திர விருப்பத்தின் மூலமாக நன்மை செய்வதற்கு அழைப்பு பெற்றமை.

16. கி.மு 2000 – 1700 இடைப்பட்ட காலப்பகுதியை குறிக்கும் பெயர்
1. இறைவாக்கினர் யுகம் 2. குலமுதுவர்கள் யுகம் 3. அரசர்கள் யுகம்
4. ஜனநாயக யுகம் 5. பழங்கால யுகம்

17. ஏசாவிலிருந்து வரும் இனம் யாது?
1. இஸ்ல் 2. ஹிக்சோஸ்வரு 3. ஏதோம் 4. சமாரியர் 5. எபூசியர்

18. ராகேலின் பணிப்பெண் பில்கா மூலம் யாக்கோபு பெற்ற பிள்ளைகள்
1. தாண், நப்தலி 2. இசக்கார், செபுலோன் 3. காத், ஆசேர்
4. யோசேப்பு, பெஞ்சமின் 5. ரூபன், சிமியோன்

19. றதா எனும் எபிரேயச் சொல்லினால் விளக்குவது.
1. ஆராதனை செய்தல், அடிமையாக்கல், பாவித்தல்
2. தண்டனை விடுதலை, ஆசீர்வாதம்
3. சக்தியை பெற்றுக்கொள்ளுதல், பரவுதல், வழங்குதல்
4. அரவணைத்துக் கொள்ளல், வழிகாட்டல், பாதுகாத்துக்கொள்ளல்
5. அடிமையாக்கல், விடுதலை, தண்டனை

20. புதிய எற்பாட்டில் ஐந்து நூல்களில் எழுத்துரு தன்மை பெற்ற இறைவனின் சீடரானது
1. யோவான் 2. மாற்கு 3. மத்தேயு 4. பேதுரு 5. லூக்கா

21. கி.பி 150ம் ஆண்டளவில் எழுதப்பட்ட "யூதர்களுடன் உரையாடல்" என்கின்ற நூலில் யூதர்கள் திருமறை நூலை தவிர்த்துவிட்டதாக குற்றம் சாட்டுபவர் யார்?
1. புனித அகுஸ்தீன் 2. புனித டெரூலியன் 3. புனித ஜஸ்டின்
4. புனித சிறில் 5. புனித தோமஸ் அக்குவைனஸ்

22. "பொதுமக்களின் பிரதி" என்ற அர்த்தத்தை உள்ளடக்கியது
1. செப்துலாஜிந்த் பிரதி 2. மசரோட்டிக் பிரதி 3. எபிரேய பிரதி
4. வல்கேற் பிரதி 5. கும்ரான் பிரதி

23. இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருமறை நூலின் நோக்கங்களை மட்டும் உள்ளடக்கிய விடையானது.
1. கற்பித்தல், சீராக்குதல், தீய எண்ணங்களை அகற்றுதல்
2. எழுதுவதற்கு, நல்வாழ்வை வாழ்வதற்கு, அறிவுரை வழங்குவதற்கு
3. கற்றலுக்கு, சீராக்குதல், அறிவுரை வழங்குதல்
4. கட்டளையிடல், முன்மாதிரிகை காட்டுவது, கற்பித்தல்

5. முன்மாதிரிகை காட்டுவது, நீதியான வாழ்வு வாழ, சீராக்க

24. கலப்பு சமயங்களை விசுவாசித்ததினால் அகௌரவப் பெயரைப் பெற்ற மக்கள் கூட்டமானது.
1. பிலிப்பியர் 2. பரிசேயர் 3. எபிரேயர் 4. சமாரியர் 5. யூதேயர்

25. "நெகெப்" என்பதின் திருவிவிலியத்தின் அர்த்தமானது,
1. வலது 2. உலர்ந்து 3. மலை 4. பாலைவனம் 5. சமதரை

26. * பலஸ்தீனாவின் முதுகெலும்பாகும்
* ஜெஸ்ரோல் சமவெளி இதை இரண்டாகப் பிரிக்கும்.
* இங்கு எகிப்து மற்றும் சிரியா நாட்டையும் இணைக்கும் கடற்பாதையும் உள்ளது.
மேற்குறிப்பிட்டமைக்கு அமைய புவியியல் பின்னணி என்ன?
1. யூத மலைகள் 2. கடலோரப்பகுதி 3. ஜோர்தான்
4. கிழக்கு மலைகள் 5. மேற்கு மலை

27. தொ. நூ 15 : 17 இற்கு அமைய இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின்படி இறைவனை அடையாளப்படுத்துவது,
1. அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் தீப்பந்தம் - புகைந்து கொண்டிருக்கும் தீச்சட்டி
2. எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் - வானத்திற்கு செல்லும் புகை
3. தேவதூதர்கள் - இரண்டாகப் பிளந்த மிருகம்
4. புகைந்து கொண்டிருந்த தீச்சட்டியும் - எரிந்து கொண்டிருந்த தீபந்தமும்
5. இறைவனின் தூதர் - செம்மறி ஆடு

28. விடுதலை வரலாற்றினுள் இறைவன் தமது சுய விருப்பத்தினால் தேர்ந்தெடுத்த முதல் மனிதன்
1. ஆதாம் 2. மோசே 3. ஈசாக் 4. நோவா 5. ஆபிரகாம்

29. படைப்பு பற்றிய கதையின் போது இறைவன் நான்காம் நாளில் படைத்தது.
1. வானமும், நீரும் 2. பறவைகள், மீனிங்கள் 3. சூரியனும், சந்திரனும்
4. வெளிச்சமும், இருளும் 5. நிலமும், மிருகமும்

30. இணைத்திருமுறை நூல்கள் மட்டும் அடங்கிய விடையானது
1. தோபித், சீராக்கின் ஞானம், பாரூக் 2. செக்கரியா, மக்கபேயர், நாகூம் 3. எஸ்தர், தானியேல், நாகூம்
4. யூதித், சாலமோனின் ஞானம், புலம்பல் 5. சங்கீதம், மலாக்கி, மீக்கா

31. தொடக்க நூலுக்கு அமைய படைப்பு பற்றி இரண்டு கதைகள் உள்ளன. அவற்றிலிருந்து எமக்கு எடுக்கக்கூடிய செய்தி யாது?
1. படைப்புப் பற்றி உலகில் இருக்கும் கதைகளுக்கு சவாலாக இருப்பது.
2. படைப்புப் பற்றிய கதைகளிலுள்ள வரலாற்றுக் காரணங்களும், புவியியல் காரணங்களையும் தேடிப்பார்ப்பது.
3. படைப்பப் பற்றிய கதையை பிறமதத்தவர்க்கு சொல்லி அவர்களை எங்கள் மதத்திற்கு எடுப்பது.
4. படைப்புப் பற்றிய கதைகளில் கூறும் இறைதார்மீக செய்தியை கிறிஸ்தவ வாழ்வுக்கு எடுப்பதற்கு
5. படைப்பின் செயற்பாடு தொடர்பான விஞ்ஞான காரணங்களை ஆராய்தல்

32. கி.மு. 7ம் நூற்றாண்டில் முதல் மூன்று காலாண்டுகளில் வலிமைமிக்க பேரரசனானது.
1. சிரியா 2. பபிலோன் 3. ஆசிரியா 4. உரோம் 5. எகிப்து

33. "பெத்தேல்" என்ற இடத்தின் பெயரின் அர்த்தம்
1. "இறைவன் எங்களுடன்" என்பதாகும் 2. "இறைவன் விடுவிப்பார்" என்பதாகும்
3.. "இறைவன் இல்லம்" என்பதாகும் 4. "இறைவன் இருக்கின்றார்" என்பதாகும்
5. "இறைவனின் மாளிகை" என்பதாகும்.

34. எழுத்தாளர் இறைஏவுதலுக்கு உதாரணமானது,
1. மனிதன் தூய ஆவியின் அனுபவத்தினூடாக இறைவனின் சொற்களினூடாக கதைத்தார். (2பேது 1:21)
2. நீங்கள் கூறவேண்டியவை ......... தூய ஆவி தெரிவிப்பார். (லூக் 12:12)
3. நான் உங்களுக்கு கூறிய எல்லா வார்த்தைகளையும் புத்தகத்தில் எழுதி வையுங்கள் (எரே 30:2)
4. தூய ஆவியை அவருக்கு அளித்த கடவுள் எங்கே (சொ. 63)
5. மகிமைமிக்க இறைவனின் ஆன்மீகம் என்னிடம் உள்ளன. (சொ 61:1)

35. சாரோன் சமவெளி பரவி இருப்பது
1. கார்மேல் மலை அடியிலிருந்து வடக்க வரை 2. யோப்பா தொடக்கம் செசரியா வரை
3. தாண் தொடக்கம் பெத்தேல் வரை 4. கொராசில் இருந்து திபேரியா கடல் வரை
5. பெத்பா தொடக்கம் நாயீன் வரை

36. திருவிவிலியத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் படைப்பு கதைகளுக்குரிய பாரம்பரியம்
1. குரு, எலோகிம், 2. குரு, யாவே 3. குரு, இணைச்சட்டம்
4. யாவே, இணைச்சட்டம் 5. யாவே, எலோகிம்

37. கீழே குறிப்பிட்டுள்ள கூற்றுக்களில் துன்பங்களை வரவழைத்ததின் நோக்கமானது.
A - இறைவனின் ஆட்சியை பார்வோனுக்கும் எகிப்து மக்களுக்கும் கூறுவது
B - இறைவனின் ஆட்சி பார்வோனும் எகிப்து மக்களும் ஏற்றுக்கொள்ள
C - இஸ்ராயேல் மக்களின் விடுதலைக்கு பின்னணி அமைப்பது.
D - இயற்கைக்கும், இறைவனுக்குமிடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுவது.

1. A,B,C 2. A,B,D 3. B,C,D 4. A,C,D 5. A,B,C,D

38. பாஸ்கா விழாவின் பாஸ்கா செம்மறியை உண்ணுவதன் அர்த்தமானது.
1. இறைகட்டளையை விரைவில் செய்ய வேண்டியமையை அடையாளப்படுத்தல்
2. இறைவனோடு ஏற்படுத்திய உடன்படிக்கையை அடையாளப்படுத்தல்
3. அடிமைத்தனத்திலுள்ள கசப்பான துன்பங்களை அடையாளப்படுத்தல்.
4. விழாக்கள், கொண்டாட்டங்கள், வெற்றி ஆகியவற்றின் கொண்டாட்டத்தை அடையாளப்படுத்துவது.
5. பரம்பரையிலிருந்து இன்னொரு பரப்பரைக்கு அளித்த கட்டளையாக அடையாப்படுத்தல்

39. சீன் பாலைவனத்திலிருந்து சென்ற இஸ்ராயேல் மக்கள் கூடாரம் அமைத்த இடம்
1. இரபிதம் 2. மாசா 3. மாரா 4. தாண் 5. பெத்தேல்

40. விடுதலைப் பயணத்தின் போது இஸ்ரயேல் மக்கள் யாருடைய ஆக்கிரமிப்புக்கு உள்ளானார்கள்
1. கித்சோஸ்வரு 2. அமலேக்கியர் 3. பிலிஸ்தியர் 4. எபூசியர் 5. பரிசேயர்

41. யாக்கோபுக்கு இஸ்ரயேல் என்ற பெயர் கிடைத்தது.
1. தனது எதிர்காலத்தைப்பற்றி இறைதிட்டத்தை புரிந்து கொண்ட சந்தர்ப்பத்தில்
2. தனது பறப்பிலிருந்து
3. தன் சகோதரனுடன் நற்புறவு கொண்ட சந்தர்ப்பம்
4. தேவதூதருடன் மற்போரிட்ட பின்பு
5. சகோதரனிடமிருந்து தலைமகன் உரிமையும், தந்தை ஆசீர்வாதமும் பெற்ற பின்பு

42. பின்வரும் விடயங்களுக்கமைய அமைந்த பாரம்பரியங்களை ஒழுங்கு முறையாக குறிப்பிடுவது.
* மக்களுக்கு நேரடியாக இறைதொடர்பு செய்ய முடியாமையினால் குருக்கள் இணைப்பாளராகுதல்
* இஸராயேல் மக்கள் உடன்படிக்கையூடாக தொடர்புபட்டிருப்பதும், பக்கச்சார்பாக இருக்க வேண்டும் என்றால் அவர்கள் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும்.
* இறைவன் மனிதரை விபரிக்கும் விதத்தில் விபரித்து மனிதன் செயற்படும் விதத்தில் செயற்படுவதை காட்டுதல்
* உடன்படிக்கை வாழ்க்கை முக்கியத்துவத்தினால் இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கயோடு ஆரம்பிக்கும்

1. PDJE 2. DEPJ 3. EDJP 4. JEDP 5. PEDJ

43. “எனக்கு தெரியாது நான் என் சகோதரனின் பாதுகாவலனா?” என்ற காயீனுடைய பதிலில் எடுத்துக்காட்டும் விடயமானது
1. தனது சுதந்திர விருப்பத்தை தீமைக்கு செயற்படுத்தியமை
2. பாவத்தின் வளர்ச்சியால் மனிதர் முரட்டுத்தனமாதல்
3. காயீன் இறைவனிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்த்தல்
4. தன் சகோதரனைப் பற்றி பொறாமை கொள்ளல்
5. காயீனுக்கு மனித தொடர்பு அற்ற வாழ்வு கிடைத்தல்

44. விடுதலைப்பயணம் 1/8 இல் கூறியுள்ளபடி யோசேப்பு பற்றி எதுவும் அறியாத புதிய அரசர்
1. I ம் ஆமோஸ் 2. ஆகாஷ் அரசர் 3. இராம்சேஸ் 4. சைரஸ் 5. பார்வோன்

45. * லேவி கோத்திரமாகும்
* தந்தை அம்ரான், தாய் யோகேபெத்
* சகோதரி மிரியம்

மேலே குறிப்பிட்ட தகவல்களுடன் தொடர்புடைய நபர்
1. ஆபிரகாம் 2. யாக்கோபு 3. நோவா 4. சாமுவேல் 5. மோசே

46. அரசமாளிகையில் மோசேயின் வளர்ச்சி மூலமாக எடுத்துக்காட்டுவது.
1. இரத்த உறவுகளை விட அரசமாளிகைக்கு மோசே விருப்பப்படுவதை
2. பார்வோன் பிரபலமான அரசன் என்பதை எடுத்துக் காட்டுவது.
3. அரசமட்டத்தில் அனுபவம் இல்லாமல் இறைகட்டளையை நிறைவேற்ற முடியாமை
4. பாலைவனப்பயணத்திற்கு பெரும் முதல் அனுபவம்
5. பார்வோன் முன்னிலையில் இணைப்பாளராக இருப்பதற்கு இறைவன் தயாரித்தமை

47. இறைகரத்தின் செயலால் ஏற்பட்ட பத்து பெரும் துன்பங்களுள் ஐந்தாவதையும், எட்டாவதையும் குறிப்பது.
1. தவளைகள், ஈக்கள் 2. கொசுக்கள், கொப்புளங்கள் 3. கால்நடைசாவு, வெட்டுக்கிளிகள்
4. கல்மழை, வெட்டுக்கிளி 5. கொசுக்கள், காரிருள்

48. செழும்பிறையினுள் இருக்கும் பழைமையான மூன்று முக்கிய நாகரீகமானது
1. எகிப்து, கிறீஸ், உரோம் 2. ஆசிரியா, சிசிலியா, எகிப்து 3. பபிலோனியா, எகிப்து, சிரியா
4. சிரியா, உரோம், மொசபத்தோமியா 5. ஆசிரியா, பபிலோனியா, எகிப்து

49. இலாசரஸ், மார்த்தா, மரியாளினுடைய ஊரானது
1. ஜெரிக்கோ 2. பெத்தானியா 3. காலான் 4. கப்பர்நாகூம் 5. நாயீம்

50. திருமுழுக்கு யோவானுடைய சாவுக்கு கட்டளையிட்ட அரசன்
1. ஏரோது பிலிப்பு அரசன் 2. பெரிய ஏரோது 3. ஏரோது அந்திபாஸ் அரசர்
4. ஆர்க்கலாவுஸ் 5. பொந்தியு பிலாத்து

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

| 43 | T | II |
|---|---|---|

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ........................

# கிறிஸ்தவம் II
# Christianity II

காலம் : 3 மணி

- **பகுதி I இலிருந்து 2 வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து 3 வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

01. i. சமாரிய மத்திய மலைப்பிரதேசத்தில் காணப்பட்ட முக்கிய இடங்கள் 2 ஐ குறிப்பிடுக.

ii. யூதா மலைப்பிரதேசத்தில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள நிகழ்வுகள் இரண்டை எழுதுக.

iii. இஸ்ராயேல் மக்கள் எகிப்து தேசத்தில் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வந்தாலும் மீண்டும் அசீரிய நாட்டில் அடிமைகளாக்கப்பட்டதினூடாக கிறிஸ்தவர்களாகிய உங்களுக்கு கிடைக்கும் செய்திகள் மூன்று எழுதுக.

iv. யோசியா அரசரின் காலத்தில் (கி.மு 639 – 609) சமய சீர்திருத்தங்களுக்காக முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொடுத்ததைப் போன்று நீங்கள் தற்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தினை வளர்ப்பதற்கு பங்களிப்பு கொடுக்கும் வீதம் நான்கு எழுதுக. (புள்ளிகள் 2+4+6+8 = 20)

02. i. எலோகிம் பாரம்பரியத்தின்படி உடன்படிக்கை நிபந்தனையில் அடங்குகின்ற இரண்டு விடயங்களை குறிப்பிடுக.

ii. யாவே எழுத்தாளர் திறமையான எழுத்தாளர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தகுந்த கதைகள் நான்கை குறிப்பிடுக.

iii. பாரம்பரியம் நான்கிலும் முன்வைக்கும் கருப்பொருளை கற்கும் போது உங்கள் வாழ்விற்கு எடுக்கக் கூடிய மூன்று விடயங்களைத் தருக.

iv. எலோகிம் பாரம்பரியத்திற்கு ஏற்ப மோசே இறைவாக்கினர் சேவையை செய்தார். பொதுக்குருத்துவம் பெற்ற இறைவாக்கினர் பொறுப்பை நீங்கள் செய்கின்ற விதம் நான்கு தருக. (புள்ளிகள் 2+4+6+8 = 20)

03. i. மோசே பார்வோனை சந்தித்து நடைபெற இருப்பதை குறித்து எச்சரிக்கை விடும் கடுமையான துன்பங்கள் இரண்டு எழுதுக.

ii. பாஸ்கா செம்மறியை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொண்ட நான்கு விடயங்களை குறிப்பிடுக.

iii. பாலைவனப்பயணத்தில் போது நடந்த இடையூறுகளால் இஸ்ராயேல் மக்களின் நம்பிக்கை குறைந்தன. தற்கால சமூகத்தில் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிராக வரும் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய வழிகள் மூன்று எழுதுக.

iv. யூதேய பாரம்பரியத்தில் கிறிஸ்தவ சபைக்கு அளித்த பாஸ்கா விழா காலததிற்கு காலம் காட்சிப்படுத்தப்பட்டு வந்தாலும் அதில் முக்கிய நோக்கம் மாறாமல் செய்ய வேண்டியது பொறுப்பாகும். இறை ஆராதனையை அர்த்தமுள்ளதாக செய்வதற்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் நான்கு எழுதுக.
(புள்ளிகள் 2+4+6+8 = 20)

## பகுதி - II

04. i. நீதித்தலைவர்களின் காலத்தில் (கி.மு 1200 – 1050) பலஸ்தீனாவில் நடந்த அரசியல் மற்றும் கலாசார மாற்றங்களை விபரிக்குக.

ii. தற்காலத்தில் காணப்படும் பிரச்சினையாக ஆட்சியாளர்களுடைய பொறுப்புக்களை செய்வதில்லை அதற்கு தாக்கம் செலுத்தும் காரணிகள் ஐந்தை விபரிக்குக. (புள்ளிகள் 10 x 2 = 20)

05. i. பலஸ்தீனா வடக்கு, தெற்காக பிரிவதற்கான காரணத்தின் பின்னணியை 100 சொற்களில் விளக்குக.

ii. பலசமயம், பல கலாச்சாரம், உள்ள நாட்டில் வாழும் கிறிஸ்தவ உங்களுக்கு நாட்டின் ஒருமைப்பாட்டை கடைபிடிப்பதற்காக பின்பற்றக்கூடிய ஆலோசனைகள் ஐந்தை விபரிக்குக.

(புள்ளிகள் 10 x 2 = 20)

06. i. படைப்பின் முதல்கதை வெறும சொல்லுக்கு அப்பாற்பட்ட செய்தியை வாசிப்பவர்களுக்கு அளிக்கும் அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஐந்து உதாரணங்கள் ஊடாக விளக்குக.

ii. பாம்பு ஆராதனை பற்றி கானானியரினதும், திருவிவிலியத்தினதும் குறிக்கோளை சுருக்கமாக குறிப்பிட்டு, மனிதன் விருப்பங்களுக்கு அடிமையாக செயற்படும் விதங்கள் நான்கை விபரிக்குக.

(புள்ளிகள் 10 x 2 = 20)

07. i. மனித பலவீனத்தை அடிப்படையாக வைத்து இறை அழைப்பை மறுக்கும் மோசேயை இறைவன் பலப்படுத்தும் விதத்தை விபரிக்குக.

ii. மோசே சவால் உள்ள சமுதாயத்தில் தன் தூதுப்பணியை திறமையாக செயற்படுத்தியது போல் இலங்கை கிறிஸ்தவர்களுக்கு தன் தூதுப்பணியை செயற்படுத்தும் போது முகம் கொடுக்கக் கூடிய சவால்களை வெற்றி கொள்ளும் விதம் ஐந்தை விபரிக்குக. (புள்ளிகள் 10 x 2 = 20)

08. i. நீதியை கடைப்பிடிப்பதற்காக உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டிருக்கும் இஸ்ராயேல் மக்கள் இணைச்சட்டத்தின் படி காட்டும கருப்பொருள்களையும், மறையுண்மைகளையும் விபரிக்குக.

ii. தற்போதைய சவால்கள் முன்னே இறை – மனித தொடர்பு வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்களாகிய நீங்கள் பின்பற்றும் நடவடிக்கைகள் ஐந்த விபரிக்குக. (புள்ளிகள் 10 x 2 = 20)

## முதலாம் தவணைப் பரீட்சை - 2018

## கிறிஸ்தவம் - 12 தரம் - **Christianity**

### பகுதி - I விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **01. -** 3 | **11. -** 3 | **21. -** 3 | **31. -** 4 | **41. -** 4 |
| **02. -** 4 | **12. -** 1 | **22. -** 4 | **32. -** 3 | **42. -** 1 |
| **03. -** 1 | **13. -** 4 | **23. -** 1 | **33. -** 3 | **43. -** 2 |
| **04. -** 5 | **14. -** 1 | **24. -** 4 | **34. -** 3 | **44. -** 3 |
| **05. -** 1 | **15. -** 4 | **25. -** 1 | **35. -** 2 | **45. -** 5 |
| **06. -** 2 | **16. -** 2 | **26. -** 5 | **36. -** 2 | **46. -** 5 |
| **07. -** 3 | **17. -** 3 | **27. -** 4 | **37. -** 1 | **47. -** 3 |
| **08. -** 3 | **18. -** 1 | **28. -** 4 | **38. -** 2 | **48. -** 5 |
| **09. -** 4 | **19. -** 4 | **29. -** 3 | **39. -** 1 | **49. -** 2 |
| **10 -** 2 | **20. -** 1 | **30. -** 1 | **40. -** 2 | **50. -** 3 |

(புள்ளிகள் 1 x 2=100)

### பகுதி - II -

(01) I. பெத்தேல், சீலோ, செக்கேம்

II. பழைய ஏற்பாடு.

* எபிரோனை அண்டிய பகுதியில் ஆபிரகாம் நீண்ட காலம் வாழ்ந்துள்ளார்.
* தாவீது அரசன் யூதாவின் அரசனாகத் திருப்பொழிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய ஏற்பாடு.

* பெத்லகேம் நகரில் இயேசுவின் பிறப்பு
* திருமுழுக்கு யோவானின் பிறப்பு.

III
- இறைவனிடமிருந்து தூரம் செல்வது துன்பத்திற்கு காரணமாகின்றது.
- கிறிஸ்தவர்களுக்கு இருப்பது ஒரே க[illegible] என்பது.
- சிலை ஆராதனை கிறிஸ்தவ குறிக்கோளுக்கு தகுதி அற்றவை என.
- மனித ஆட்சி எக்காலமும் முறையாக செயல்படுவது இல்லை.
- இறை ஆட்சிக்கு நாம் அனைவரும் கட்டுப்பட வேண்டியவர்கள்.

IV
* பெற்றுக் கொள்வதில் மக்களை பலப்படுத்தல்.
* இறை தர்மம், மறையாசிரியர் போன்ற விசேட சந்தர்ப்பங்களிலிருந்து ஆன்மீக கல்வி பெறல்.
* சமய நூல்கள், சஞ்சிகைகளுக்காக புதிய கருத்துக்களை எழுதுவது.
*

(02) I. நேர்மை, உடன்பாடு, மீட்பு, பாவம்.
II. படைப்பின் இரண்டாம் கதை, மனிதனின் கீழ்படியாமையும் தண்டனையும், காயீனும் ஆபேலும், நோவா, பாபேல் கோபுரம்.
III. * ஒரே கடவுளை நம்புவது.
* வேறு கடவுளை வணங்குவதும், சிலை ஆராதனையையும் மறுக்க வேண்டும் என.
* இறைவன் எல்லாவற்றிற்கும் மேலான கடவுள் என்பது.
* சபத் தினம் இறைவனுக்காக அர்பணிக்க வேண்டியவை என.
* இறை ஆராதனை அர்த்தமுள்ள படி செய்ய வேண்டியவை
IV. • மறைப்பாடசாலைகளில் கற்பித்தல்.
• இல்லற ஊழியப் பணியில் ஈடுபடல்.
• நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு
• திருமறையை கற்றல்.
• விவிலிய படைப்புகள் செய்தல்.

(03) I. வெட்டுக்கிளி, தவளை, கால்நடை சாவு.
II. * நிசான் மாதம் 10ம் திகதி செம்மறி ஆட்டை எடுக்க வேண்டும்.
* ஆண் மிருகமாக இருக்க வேண்டும்.
* வெட்டுகள், கீறல்கள் இல்லாமல் இருத்தல்.
* ஒரு வயது குட்டியாக இருக்க வேண்டும்.
III. • இலௌகீகத்துக்கு அல்லாமல் ஆன்மீக தேவைகளுக்காக முதல் இடம் கொடுக்க வேண்டும்.
• தர்மத்தைப் பற்றி மிக சரியாக அறிவு பெறல்.
• இறைவார்த்தையை கற்றல்.
• செபத்தை வாழ்வின் பிரபலமான ஆயுதமாக கொள்ளல்.
IV. * செயலற்ற முறையில் இருக்கும் கிறிஸ்தவ வாழ்வை புதுப்பித்தல்.
* திருவழிப்பாட்டிற்காக இல்லற பங்களிப்பு
* திருப்பலியின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல்.
* மாணவர்கள், இளைஞர்கள், வயோதிபர்களுக்கான செயற்பாடுகளை நடாத்துதல்.

## பகுதி – II

(4) I. 150 ஆண்டு.
→ சமய, அரசியல், கலாசார மாற்றம் வந்த காலம்.
→ பலஸ்தீனாவில் குடியிருந்த பின்.
* நிலையான விவசாய முறைக்கு உள்ளானார்கள்.
* தோட்ட துரவுகள் உரிமை கொள்ளுதல்.
* நிலையாக வீடுகள் அமைத்தல்.
* கலாசாரம் ஏற்படுதல்.
→ பொது ஆட்சி முறை அல்லது ஒரு ஆட்சி இல்லை.
→ நாட்டினுள் அமைதி இல்லை.
→ ஆக்கிரமிப்புகளுக்கு முகம் கொடுத்தல்.
→ வெளி சவால்களுக்கு எதிராக போர் செய்து மக்களை ஒற்றுமையாக்கல்.
→ நீதித் தலைவர்கள் 12 (ஒத்னியேல், ஏகூது, சம்கார், தெபோரா, கிதியோன், தோலா, யாயீர், இப்தா, இப்சான், ஏலோன், அப்தோன், சிம்சோன்)

II * செல்வம் சேர்ப்பதற்கு உள்ள ஆசை.
* சுயநலம்.
* பதவி ஆசை
* அரசியல் போட்டி.
* தேசப்பற்று இல்லாமல் இருத்தல்.
* மக்களின் துக்க வேதனைகளுக்கான முக்கியத்தும் இல்லாமை.

(5) I. சாலமோன் அரசனின் ஆட்சியில் மக்களுக்கு விரக்தி ஏற்பட்டமை. அதற்கான காரணம்.
* வரியின் சுமை அதிகரிக்கப்பட்டமை.
* அவரது கட்டடம் கட்டும் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்ட மக்களின் தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டமை.

சாலமோன் அரசனின் இறப்பிற்குப் பின்னர் அவருடைய மகன் ரெகபெயாமிடமிருந்து ஆறுதல் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். அது நிறைவேறவில்லை. இதனால் கோபம் கொண்ட துன்பப்பட்ட மக்கள் கிளர்ச்சி செய்தனர்.

இக்கிளர்ச்சிக்காரருக்கு தலைமை தாங்க எரொபவாம் நியமிக்கப்பட்டார். அதன் பிரதிபலனாக வடக்கு – தெற்கு நாடுகள் பேதம் உண்டாகியது.

II மாணவர்கள் எழுதியுள்ள விதத்தை கவனத்தில் கொண்டு புள்ளி வழங்கவும்.

(6) I • வெறுமையான பாலை நிலம். – உலகம் உயிர்ப்பு அற்றவையாக உள்ளன.
• வானமும் பூமியும் – விண்ணும் விண்ணிலுள்ளவையும், மண்ணும் மண்ணிலுள்ள அனைத்தையும் குறிக்கும்.
• பெரிய வெளிச்சமும் சிறிய வெளிச்சமும் — சூரியன் சந்திரன் என்பன பெயரிடப்படவில்லை. எகிப்திய பேரரசன் சூரியனை கடவுளாகவும், பபிலோனிய பேரரசன் சந்திரனை கடவுளாகவும் கருதி ஆராதனை செய்தார்கள். இதனால் பெரிய வெளிச்சம் சிறிய வெளிச்சம் என பெயரிடப்பட்டுள்ளது. அக்கடவுள்களின் பெயர்களை நினைவிலிருந்து அப்பால் வைப்பதற்கு.
• ஆண் பெண் படைப்பு – நம் உருவிலும் சாயலிலும் உருவாக்குவோம்' என்பது மதிப்புக்குரிய பன்மை சொல். இலக்கண ரீதியுமாகும். மனிதன் இறை தூதுவராகும்.
• தொ.நூ. 1:28 'கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, நீங்கள் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் - - - - -
மனிதன் படைப்பின் பங்குதாரராகின்றான். முழு உலகையும் ஆளுவதற்கும் அழைக்கப்பட்டுள்ளான் (ஆதா) அரவணைப்பு, வழிகாட்டல், பாதுகாத்துக் கொள்ளல். என்ற அர்த்தத்தை முன்வைத்து உள்ளன.

II. கானானியர்க்கு அமைய பாம்பு செழுமையின் அடையாளமாகக் கருதப்பட்டது. அச்செழுமை வழிபாடுகளில் பாகால் தெய்வம் முதன்மை இடம் பெற்றது. அதன் வாழ்க்கை சக்கரம் இயற்கையின் கால நியதிகளுக்கு அமைய நடைபெற்றது. பாகால் தெய்வத்தின் மனைவியான அசேரா என்பதன் அர்த்தம் பாம்பு அது காமத்தின் சின்னமாகும்.

திருவிவிலியத்திற்கு ஏற்ப பாம்பு விருப்பத்தின் சின்னமாக உள்ளது.
மனிதன் விருப்பத்திற்கு அடிமையாக உள்ளார்.
இறைவன் அளித்த சுதந்திரத்தினால் மனிதன் பாவத்திற்கு உள்ளானார்.
தீமைக்கு செவிமடுக்கும் மனிதன் கலாசார ஆட்சியை உரிமை கொள்வதற்கு முயற்சி செய்வார்.

(மாணவர் எழுதி இருப்பதை பார்த்து புள்ளி வழங்கவும்)

(7) I.

| அழைப்பை ஏற்க விருப்பமின்மை | தைரியப்படுத்தல். |
|---|---|
| 1. வி.ப. 3:11<br>பார்வோனிடம் செல்லவும் இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கு நான் யார்? | வி.ப. 3:13<br>நான் உன்னோடு இருப்பேன்.... ....... நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே. |
| வி.ப. 3:13<br>அவர்கள் அவர் பெயர் என்ன? என்று வினவினால் அவர்களுக்கு என்ன சொல்வேன் என்று கேட்டார். | வி.ப. 3:14.<br>இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே ........ |
| வி.ப. 4:1<br>ஆண்டவர் உனக்குக் காட்சியளிக்க-வில்லை என்று சொல்வார்கள் என்றார். | வி.ப. 4:2-9<br>புதுமை செய்வதற்கான வல்லமையை அளித்தல். |
| வி.ப. 4:10<br>நாவன்மை அற்றவன் நான் ஏனெனில் எனக்கு வாய் திக்கும் நா குழறும் என்றார் | வி.ப. 4:11-12.<br>ஆகவே இப்பொழுதே போ, நான் உன் நாவில் இருப்பேன் நீ பேச வேண்டியதை நான் உனக்கு கற்பிப்பேன். என்றார். |
| வி.ப. 4:13<br>வேண்டாம் ஆண்டவரே தகுதியுடைய வேறொருவரை நீர் இப்பொழுதே அனுப்பி வைப்பீராக என்றார். | வி.ப. 4:14-15<br>லேவியனான ஆரோன் உனக்குச் சகோதரன் அல்லவா? ........ |

* இக்கருத்துக்கள் இருந்தால் புள்ளி வழங்கவும்.

II * பிறசமயத்தவர்களின் சவால்களுக்கு பதில் அளிப்பதற்காக சமய அறிவை வளர்த்தல்.
* சவால்களின் போது செபத்தை ஆயுதமாக்கல்.
* இறை நம்பிக்கை மீது தைரியமாக இருத்தல்.
*
* எளிமையான வாழ்வு வாழ்வது குறித்து மகிழ்ச்சியடைதல்

(8) I. இஸ்ராயேல் மக்கள் உடன்படிக்கையோடு ஒன்றித்து இருப்பதினால் பக்கச்சார்பாக இருப்பதற்கு நீதியை கடைப்பிடிக்க வேண்டும். இ.ச 11:8-32 [illegible]. நீதியை கடைப்பிடிப்பதற்கு அல்லது கடைப்பிடிக்காமல் இருப்பதை பற்றிய விளைவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
உடன்படிக்கையை மீறுதல் மீளவும் நாடு கடத்தப்படுவதற்கு காரணமாகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இந்த இணைச்சட்ட கோட்பாடுகள் அனுசரிக்க முடியாத சட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவை அல்ல. அவை இஸ்ராயேலரின் வாழ்க்கைக்கு மிக நெருங்கியவை.
ஆதலால் அவைகளை அனுசரிக்க ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.
அவ்வாறு கட்டளைகளை அனுசரித்தல் எவ்வேளையும் நடைபெற வேண்டும்.
எருசலேம் தேவாலயத்தில் மாத்திரமே இறைவனை வழிபட முடியும்.
(பக்கம் 29 இல் பார்க்கவும்)

II மாணவர்கள் எழுதியுள்ள விடயங்களை கருத்திற் கொண்டு புள்ளி வழங்கவும்.

௨


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න